## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

## கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 313 / 2019 | காவல் நிலையம்– சிப்காட் | |
| பெயர் : மலைராஜ் | அ.சா.3 | நாள் : 19.09.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 3 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மலைராஜ் | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | சுந்தரராஜ் | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | காரணி | வயது | : | 50 |

( எதிரிகள் 2 மற்றும் 3 ஆஜர். எதிரி1 ஆஜர் இல்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் காரணி கிராமத்தில் கடந்த 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சுமார் 2 வருடங்களாக சிப்காட் வளாகத்திலுள்ள அசோக் மினரல் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் வேன் ஒட்டுநராக வேலை செய்து வருகிறேன் என்றும், மேற்படி நிறுவனத்திற்கு எதிரே தேவன் டெக்கஸ் பி லிமிடெட் என்ற நிறுவனம் உள்ளது என்றும், அது சுமார் 1 வருடமாக மூடி உள்ளது என்றும், அந்த கம்பெனியில் சுவரும் மேற்கூரையும் மட்டும் உள்ளது என்றும், எந்த மிஷின்களும் இல்லை என்றும், அதன் காரணமாக மேற்படி நிறுவனம் நான் பணி செய்யும் நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ளது என்றும், கடந்த 4.1.2013 அன்று காலை 8 மணியளவில் நான் பணி செய்யும் கம்பெனியில் மேற்பார்வையாளர் கணேசன் மற்றும் செக்யூரிட்டி முனிராஜ் ஆகியோர் மூடியுள்ள கம்பெனியை பார்வையிட்ட போது, மேற்கூரையான ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளை உடைத்து அதிலிருந்த இரும்பு ஆங்கிள்களை இரும்பு பைப்புகளை யாரோ திருடு சென்றிருப்பதை பார்த்து புகார்

அளித்ததாக இந்த வழக்கு சம்பந்தமாக மேற்கண்ட விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் இந்த வழக்கின் எதிரிகளுக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக  எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள்  தரப்பில் குறுக்கு  விசாரணை**

எதிரிகள்  தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஒம்/– மலைராஜ்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள்  முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு  சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.09.19 13:01:13 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி